1979 மார்ச் 6]

நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்.

*வினா எண் 252— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு அண்மையில் ரூ. 51 இலட்சத்தினை ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ) *அறிக்கை அவையின் முன்னர் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : புயலாலும், வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட மக்களுக்கு இந்தத் தொகையிலிருந்து எதுவும் செலவிடப்படவில்லை என்று அறிகிறேன். ஆகவே புயலாலும், வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட மக்களுக்கு —இது தவிர வேறு தனியான ஒரு திட்டம் நடத்தி வருவதாகத் தெரிகிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை இதோடு இணைத்து மத்திய அரசின் உதவியோடும் மாநில அரசின் உதவியோடும் நடத்தப்படுகிற செயல்முறைகளை திட்டங்களை அரசு விவரிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி, நீலகிரி வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு அண்மையில் ரூ. 51 இலட்சத்தினை ஒதுக்கியுள்ளதா என்பதாகும். ஆனால் உறுப்பினர் அவர்கள், சமீபத்தில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியைக் கேட்கவில்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்குண்டான பதிலைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தைத் தவிர நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டம் செயல்முறையில் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-40).

திரு. பண்ணை கே. சேதுராம் : நீலகிரி மாவட்டத்தில் தோடர் சமுதாயத்தினர் இன்னும் முன்னேற்றமடையாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் திட்டத்

[*......444-445-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

தில் ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா? இந்த அறிக்கையில் அந்த விவரங்கள் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நீலகிரி மாவட்டத்தில் தோடர் சமூகத்தினர் நல்வாழ்வுக்காக மறுவாழ்வுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அதற்காக திட்ட நிதி ஒதுக்கீட்டில் 20 இலட்சத்து 25 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பொருளாதார முறையில் முன்னேறவும், மிகவும் பின்தங்கிய 250 தோடர் குடும்பங்களுக்கு ஆரம்ப கட்டமாக இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான முறையில் செயல் முறைகள் தீட்டப்பட்டு இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் வாயிலாக நீலகிரி மாவட்டத்தில் குக்கல் பகுதியில் ஒரு நீரேற்றுத் திட்டம் துவக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் எப்போது துவக்கப்பட்டது? எப்போது முடிவு அடையும்? அத்துடன் கூடலூரில் இஞ்சி சாகுபடிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த இஞ்சி சாகுபடியினால் எத்தனை பேர்கள் பயனடைவார்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, குக்கல் பகுதியில் மான்டரின் பழத்தோட்ட அபிவிருத்திக்காக 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கூடலூர் பகுதியில் நீர்தேக்கத்திற்காக 33 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 20 நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இஞ்சி வளர்ப்புக்காக ஏறத்தாழ எட்டு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 15 ஹெக்டேர் பரப்பில் இஞ்சி சாகுபடி செய்யப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, புயலாலும், வெள்ளத்தாலும, பல ஆயிரக்கணக்கான நிலங்கள் மண்ணால் மூடப்பட்டது. அவற்றை எல்லாம் கடந்த இரண்டு மாதங்களாக அரசு நீக்கி கொடுத்தது, அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த மண்ணை எடுப்பதற்காகக் கொடுத்த கடனை இருபது ஆண்டுகளில் திருப்பி செலுத்திவிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள மக்களின் ஏழ்மை நிலைமையைக் கருதி இந்த உதவி முழுவதையும் இலவசமாக செய்து கொடுப்பதற்கு அரசு முன் வருமா?

1979 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பல சலுகைகளை அளித்திருக்கிறது. அந்த சலுகைகளின் அடிப்படையில் இந்த உதவியும் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தனியாகக் கேள்வி போட்டால் இதைப்பற்றி இன்னும் விவரமாகப் பதில் தருகிறேன்.

புத்தநந்தல் அணைத் திட்டம்.

*வினா எண். 253—திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969 ம் ஆண்டு திட்டம் தீட்டப்பட்டு 1971-ல் அதற்கென்று தொகை ஒதுக்கியும் செயல்படுத்தப்படாமல் உள்ள புத்தநந்தல் அணைக்கட்டுத் திட்டத்தை அரசு செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 1969 ஆம் ஆண்டில் இது போன்ற திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை.

திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைத்திட கரங்கள், உற்பத்தியைப் பெருக்கிட இதய பூர்வமான உணர்வுகள், உயிர்த்துடிப்பாக உள்ள நாடாக தமிழகத்தை மாற்றிட வேண்டும் எனவும், தந்த மாளிகையிலேயே உள்ளவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும், அப்போது தான் திட்டப்படுகின்ற திட்டத்தில் உண்மை படம் புரியும் எனவும் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் கூறியுள்ளார்கள். உண்மையிலேயே ஆண்டு ஆண்டுக் காலமாக உழைத்து உழைத்து அலுத்துப்போன தாழ்வாரப் பகுதியிலுள்ள உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சேர்ந்த உளுந்தூர்பேட்டை யூனியன் பகுதி, தியாகதுர்கம் யூனியன் பகுதி, நல்லூர் யூனியன் பகுதியில் உள்ள மக்கள் இவர்களின் நல்வாழ்வுக்காக கோமுகி நதி, ஆளாங்குறிச்சி அணை இரண்டையும் சேர்த்து சேஷ நதியையும் இணைத்து, கெடிலம் நதியாக மாறுகின்ற புத்தநந்தல் அணைக்கட்டு திட்டத்தை ஒரு நடுத்தர பாசனத் திட்டமாக உடனடியாக ஏற்று, அப்பகுதியில் உள்ள பாசன ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு வந்து விட்டால் போதுமான நல்ல திட்டமாக அமைய முடியும். இந்த நல்ல திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு உண்டான ஆய்வு வேலைகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகுபேரவைத்தலைவர்: முதலில் உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கேள்வியை கேட்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கேள்வியைக் கேட்டிருருக்கிறார்கள், இப்போது மாண்புமிகு உறுப்பி